கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர்
NEETHIKATHIR EXPRESS
எக்ஸ்பிரஸ்
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 115 | 31-10-2025 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volume 01 | Issue: 115 | 31-10-2025 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## ஆந்திராவை புரட்டிப் போட்ட மோந்தா புயல்: ஹெலிகாப்டரில் ஆய்வு செய்த முதல்வர் சந்திரபாபு நாயுடு



அமராவதி: அக்.31–

மோந்தா புயல் ஆந்திராவை புரட்டி போட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஹெலிகாப்டரில் சென்று ஆய்வு செய்தார். வங்க கடலில் மையம் கொண்டிருந்த மோந்தா புயல் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு காக்கிநாடா மசூலிப்பட்டினம் இடையே கரையை கடந்தது.

அப்போது சுமார் 100 முதல் 110 கி.மீ வேகத்தில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. கோனசீமா, விசாகப்பட்டினம், விஜயநகரம், அம்பேத்கார், ஸ்ரீகாகுளம், பிரகாசம், கிருஷ்ணா, நெல்லூர், கோதாவரி மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் காரணமாக பல வீடுகள் நாசமடைந்தன. மின் கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. பல கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல கிராமங்கள், நகரங்கள் இருளில் மூழ்கின. கோனசீமா மாவட்டத்தில் மரம் விழுந்ததில் 2 பெண்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. பல ஆயிரம் ஏக்கர் நெல், பருத்தி, மிளகாய், வாழை, பப்பாளி, தென்னை மரங்கள் அழிந்தன. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயிர் சேதத்தை விட அதிகமாக பொருட்சேதத்தை இந்த மோந்தா புயல் ஏற்படுத்தி விட்டது. ஆந்திராவில் மோந்தா புயலால் 249 மண்டலங்கள், 48 நகராட்சிகள், 18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டதாக ஆந்திர அரசு, மத்திய அரசிடம் தெரியப்படுத்தி உள்ளது. இந்நிலையில் நேற்று, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அமராவதியில் காணொலி மூலம் புயல் பாதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசும்போது, “புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைச்சர்கள், அதிகாரிகள், எம்.எல்.ஏக்கள், எம்பிக்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். எங்கள் அரசு உங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து தரும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு வருமாறு எடுத்துரைக்க வேண்டும்.

ரூ.1000 நிதியுதவி: வீடு, வாசல் இழந்த மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும். அரசு தரப்பில் அவர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்க வேண்டும். முகாம்களில் தங்கி உள்ள ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1,000 வீதம் நிதி உதவி வழங்கி, அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதிகபட்சமாக குடும்பத்துக்கு ரூ.3 ஆயிரம் வீதம் வழங்குங்கள். புயல் வருவதை நாம் தடுக்க முடியாது. ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் நாம் அதன் பாதிப்பை குறைத்து கொள்ள முடியும். தற்போது மோந்தா புயலால் 2 பெண்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால், பொருட்சேதம் மிக அதிகமாக உள்ளது.

கடைநிலை ஊழியர் முதற்கொண்டு முதல்வர் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டதன் விளைவாக மோந்தா புயலை சிறப்பாக எதிர்கொண்டோம்” என்றார். அதன் பின்னர், முதல்வர் சந்திரபாபு நாயுடு, பாபட்லா, பல்நாடு, கிருஷ்ணா, ஏலூரு, டாக்டர் பிஆர் அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார்.

# பசும்பொன்னில் ரூ.3 கோடியில் தேவர் பெயரில் திருமண மண்டபம்

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



பசும்பொன்: அக்.31

பசும்பொன்னில் ரூ.3 கோடியில் முத்துராமலிங்க தேவர் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் அவரின் சிலைக்கு மரியாதை செலுத்திய முதல்வர் ஸ்டாலின் செய்தியாளர்களிடம் பேசுகையில்,‘ இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னையே ஒப்படைத்து உழைத்த தேவரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினோம். அறம் வளர்த்த பாண்டிய மன்னர்கள் ஒருமித்த இளவல் போல கம்பீரமாக தேவர் காட்சியளிப்பதாக அண்ணா பாராட்டினார். 1963 ல் தேவர் உயிரிழந்தபோது அண்ணாவும், கருணாநிதியும், எம்ஜிஆரும் இந்த பசும்பொன் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தை 1969 ல் பார்வையிட்டு, 1974 ல் மணிமண்டபமாக உருவாக்கி கொடுத்தவர் கருணாநிதி. பாம்பன் பாலத்தை கட்டிய நீலகண்டன் தான் இந்த மணி மண்டபத்தையும் கட்டினார். அதேபோல மூக்கையா தேவரின் முயற்சியால் அமைக்கப்பட்டு, மதுரையில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் தேவர் சிலை திறப்பு விழாவுக்கு அன்றைக்கு குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரியை அழைத்துவந்து தலைமை வகித்தவரும் கருணாநிதிதான்.

மதுரை ஆண்டாள் புரம் பாலத்துக்கு தேவர் பெயரை சூட்டியதும், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெயரால் ரூ.25 லட்சம் மதிப்பிலான அறக்கட்டளையை உருவாக்கியதும் கருணாநிதி தான்.

2007ல் முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழாவை மாபெரும் அரசு விழாவாக கொண்டாடியதும், தேவரின் நினைவிடத்தில் அணையா விளக்கை அமைத்தது, தேவர் இல்லத்தை ரூ.10 லட்சத்தில் புதுப்பித்தது, ரூ.9 லட்சத்தில் தேவர் நூற்றாண்டு விழா வளைவு அமைத்தது போன்றவற்றைசெய்ததுகருணாநிதிதான்.

முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழாவையொட்டி பசும்பொன் கிராமத்துக்கு மட்டும் ரூ.2 கோடியே 5 லட்சத்து 45 ஆயிரம் ரூபாயில் பணிகளை செய்தது திமுக அரசுதான். 1989ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை உருவாக்கி கல்வி வேலைவாய்ப்பில் இந்த சமூக மக்கள் முன்னேற வாய்ப்பை உருவாக்கியவர் கருணாநிதி. மேலநீதித நல்லூரில் அமைந்த பசும்பொன் தேவர் கல்லூரிக்கு அனுமதி வழங்கியதும், அந்த கல்லூரிக்கு 44 ஏக்கர் நிலத்தை வழங்கியதும் கருணாநிதி அரசுதான். அந்த கல்லூரியை சிலர் சீர்குலைத்தபோது, எனது அரசு அதில் தலையிட்டு இப்போது சிறப்பாக இயங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேவர் ஜெயந்தி விழாவில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு மக்களை மழை வெயிலில் இருந்து பாதுகாக்க தேவர் நினைவிடத்தில் ரூ1.55 கோடியில் அமைக்கப்பட்டுள்ள தெய்வத் திருமகனார் அரங்கத்தை கடந்த ஆண்டு நான் திறந்துவைத்தேன். இப்போது பசும்பொன்னில் புதிதாக திருமண மண்டபம் அமைக்க வேண்டுமென ஒரு கோரிக்கை எழுந்துள்ளது. அதனை உடனடியாக ஏற்று ரூ.3 கோடியில் இங்கே தேவர் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என அறிவிக்கிறேன்” எனத் தெரிவித்தார்.

பசும்பொன்னில் மரியாதை செலுத்தியது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘அடக்குமுறைச் சட்டங்களின் ஆதிக்கத்தில் இருந்து நம் மக்களை மீட்டு, நேதாஜி அவர்களின் நம்பிக்கைக்குரியவராக நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் எனது மரியாதையைச் செலுத்தினேன். மேலும் மதுரை தெப்பகுளத்தில் மானம் காத்த மருதிருவர் திருவுருவச் சிலைக்கும் மலர் மாலை அணிவித்து வணங்கினேன்.

பசும்பொன்னில் மாபெரும் திருமண மண்டபம் கட்டப்படும் என்ற புதிய அறிவிப்பை வெளியிட்ட மனநிறைவுடன் சென்னைக்குத் திரும்புகிறேன்’ எனத் தெரிவித்தார்.

## ஈரோடு மாநகராட்சி நிர்வாகத்தின் மீது கடும் குற்றச்சாட்டு ..

# மண்டல குழு தலைவர்கள்மாமன்ற உறுப்பினர்கள் ஆவேசம்...

## எந்த பணியும் நடைபெறவில்லை என ஆதங்கம்...






ஈரோடு அக். 31

ஈரோடு மாநகராட்சி மன்ற மாதாந்திர கூட்டம் நேற்று காலை நடைபெற்றது. இதில் பேசிய மண்டல குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி நிர்வாகத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஆவேசமாக பேசினார்.

ஈரோடு மாநகராட்சியின் வழக்கமான மாதாந்திர சாதாரண மாம் என்ற கூட்டம் நேற்று காலை நடைபெற்றது. மேயர் நாகரத்தினம் தலைமை வகித்தார். துணை மேயர் வி. செல்வராஜ், ஆணையாளர் அர்பித் ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகராட்சி கூட்டத்தை வழக்கம் போல் மேயர் நாகரித்தினம் திருக்குறள் சொல்லி கூட்டத்தை தொடங்கி வைத்தார். அதன் பின்னர் கரூரில் நடைபெற்ற சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கோரிக்கையை 1வது மண்டல குழு தலைவர் பி. கே பழனிசாமி முன் வைத்தார். இதனைத் தொடர்ந்து அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் வழக்கம்போல் ஆவேசங்காட்டும் 43 வது வார்டு கவுன்சிலர் சபுராமா சாதிக் பாட்ஷா மேயருக்கு நன்றி தெரிவித்து ஒரு வரி மட்டும் பேசி அமர்ந்து விட்டார். அதன் பின்னர் வழக்கம்போல் மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதி குறைகளை சுட்டிக்காட்டி பேசினர்.

அதில் குறிப்பாக, மண்டல குழு தலைவர்கள் பிகே பழனிசாமி, குறிஞ்சி தண்டபாணி, காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியன், சசிகுமார் ஆகியோரும் மற்றும் திமுகவை சேர்ந்த பல்வேறு வார்டுகளின் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாநகராட்சி நிர்வாகத்தின், நிர்வாக சீர்கேடுகளையும் குறைகளையும் கடுமையாக விமர்சித்து பேசினார்கள். குறிப்பாக மாநகராட்சியில் விதிக்கப்பட்டுள்ள அதிக அளவிலான வருகினங்கள், ஊராட்சி கோட்டை கூட்டுக் குழு நீர் திட்டம் குறைபாடுகள், சாலை மற்றும் சாக்கடை வசதிகள் சரியில்லாமல் இருப்பது உள்ளிட்ட பல்வேறு குறைகளை சுட்டிக்காட்டி மாநகராட்சி நிர்வாகத்தின் மீது குற்றச்சாட்டுகளை ஆவேசமாக அடுக்கினார்கள்.

மேலும் மாநகராட்சி பகுதிகளில் தெரு நாய்களின் தொல்லை குறித்தும், அதனால் பொதுமக்கள் கடுமையான முறையில் பாதிக்கப்படுவதை சுட்டிக்காட்டியும் பேசினார்கள்.

தொடர்ந்து பேசிய கவுன்சிலர்கள் சிலர் ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட சில பகுதிகளில் மாட்டு இறைச்சி கடைகளால் ஏற்படும் சுகாதார கேடுகள் குறித்தும், மாட்டு இறைச்சி கழிவுகள் நீர் நிலைகளில் மற்றும் சாக்கடை கால்வாய்களில் கொட்டப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்து பேசினார்.

இதற்கிடையே கனி ராவுத்தர் குள்ளம் அருகே அமைய உள்ள புதிய பேருந்து நிலையத்தின் தற்போதைய நிலை குறித்து அதிமுகவை சேர்ந்த மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் தங்கமுத்து மற்றும் மாமன்ற உறுப்பினர் ஜெகதீஷ் உள்ளிட்டோர் விளக்கம் கேட்க, கூட்டத்தில் கடும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

அதன் பின்னர் ஈரோடு மாநகராட்சியின் நிர்வாக சீர்கேடு மற்றும் உயர்த்தப்பட்டுள்ள கூடுதல் வரி இனங்களை இதனால் வரை குறைக்கவில்லை என குற்றம் சாட்டி அவர்கள் அதிமுக குழு தலைவர் தங்கமுத்து தலைமையில் வெள்ளி நடப்பு செய்தனர்.

கூட்டத்தில் பேசிய பெரும்பாலான மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரி முதல் கடை நிலை ஊழியராக இருக்கும் பிட்டர், பிளம்பர் கூட எங்களை மதிப்பதில்லை. இனி வரும் காலங்களில் மாநகராட்சி கூட்டத்தை நடத்தாமல், தீர்மான புத்தகத்தை அனைத்து கவுன்சிலர்களிடம் வீட்டில் கொடுத்து கையெழுத்தை மட்டும் வாங்கிக் கொண்டு உங்கள் வசதிக்கேற்ப மாநகராட்சி நிர்வாகத்தை நடத்துங்கள் என மறைமுகமாக மேயர் நாகரத்தினத்தை சுட்டிக் காட்டி குற்றச்சாட்டு வைத்து கோபத்தோடு பலர் பேசினர்.

கூட்டத்தின் இறுதியாக பேசிய, 1வது மண்டல குழு தலைவர் பி கே பழனிசாமி பேசும்போது...

ஈரோடு மாநகராட்சியில் புதிய கட்டிடத்திற்கு மறைந்த தலைவர் கலைஞர் மு கருணாநிதியின் பெயர் வைக்கும் கோரிக்கை இன்னும் அப்படியே உள்ளது. இந்த நிலையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் படத்தை மாமாட்ட கூட்டத்தில் வைத்ததற்கு நன்றி தெரிவித்து பேசினார்.

மேலும் ஈரோடு மாநகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், காளை மாடு சிலை முதல் ஜி ஹெச் வரை உயர்தர, உயர் மட்ட மேம்பாலம் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கிய, தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் மற்றும் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு இந்த மாமன்றத்தின் மூலம் நன்றிகளை தெரிவிப்பதாகவும் பேசினார்.

பின்னர் பல்வேறு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் உதவிய ஆணையாளர் தனலட்சுமி, மாநகரப் பொறியாளர் கே. முருகேசன், மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கேரளாவில் 31 லட்சம் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்க முடிவு

திருவனந்தபுரத்தில் கேரள முதல்வர் பினராயி விஜயன் நிருபர்களிடம் கூறியது: கேரளாவில் பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தை அமல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி சமூக நல ஓய்வூதியம் பெறாத திருநங்கைகள் உள்பட ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

35 வயது முதல் 60 வயது வரை உள்ள மஞ்சள் மற்றும் பிங்க் நிற ரேஷன் கார்டுகள் வைத்திருக்கும் 31.34 லட்சம் பெண்கள் இந்த திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள். அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு மாதம் ரூ.1000 அதிகரிக்கப்படும். முதியோர் ஓய்வூதியம் ரூ. 1600லிருந்து 2000 ஆக உயர்த்தப்படும். ஆஷா தொழிலாளர்களின் ஊதியமும் ரூ. 1000 அதிகரிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# 2024 2025 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயின்ற அரசு பள்ளி மாணவர்கள் உயர்கல்வி சேர்க்கையில் 98% பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை

## மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் தகவல்.

திருச்சி. அக்.31–

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய 11064 மாணவர்கள் அனைவரும் உயர்கல்விக்கு செல்லும் வாய்ப்பை பெற வேண்டும் என்பதற்காக நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு நிகழ்வு மே மாதத்தில் இரண்டு கட்டமாக திருச்சி மற்றும் இலால்குடி கல்வி மாவட்டத்தில் நடைபெற்றது. இக்கல்லூரிக் கனவு நிகழ்ச்சியின் மூலம் மாணவர்களுக்கு உயர்கல்வி படிப்புகள் மற்றும் உதவித்தொகை சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட அளவில் உயர்கல்வி வழிகாட்டி ஆலோசனை மையம் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவின்படி மாவட்ட துணை ஆட்சியர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர், தொழில் நுட்பக்கல்லூரி முதல்வர், பல்தொழில்நுட்ப கல்லூரி முதல்வர், தொழிற்பயிற்சி நிறுவன முதல்வர், முதுகலை ஆசிரியர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணினி விவரப்பதிவளார் ஆகியோர் கொண்ட குழு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டு, உயர்கல்வி வழிகாட்டுதல் ஆலோசனை மைய உதவி எண்.9788859038 என்ற தொடர்பு எண் மூலம் மாணவர்களுக்கு தேவையான உயர்கல்வி சார்ந்த ஆலோசனைகளும், உதவித்தொகை மற்றும் சான்றிதழ் தேவை குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இம்மையத்தின் மூலம் 2919 உயர்கல்வியில் சேராத மாணவர்களுக்கு உதவி எண் மூலம் தொடர்பு கொண்டு உயர்கல்வியில் சேர ஆலோசனை வழங்கப்பட்டது. உயர்கல்வி சார்ந்த ஐயங்கள், உதவித்தொகை மற்றும் சான்றிதழ் தொடர்பாக உதவி எண் மூலம் தொடர்பு கொண்ட 327 மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மாவட்ட உயர்கல்வி வழிகாட்டி ஆலோசனை மையம் மூலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் உயர்கல்வியில் சேராத 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு குறைதீர் கூட்டம் ஜீன் மாதம் முதல் ஆகஸ்ட் வரை நடத்தப்பட்டு, உயர்கல்வியில் சேராத பெற்றோர் அற்ற மாணவர்கள், உதவித்தொகை தேவையுள்ள மாணவர்கள் ஆகியோருக்கென சிறப்பு ஏற்பாடுகள் செய்து, உயர்கல்வியில் சேர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பெற்றோர் அற்ற 44 மாணவர்கள் மாவட்ட ஆலோசனை மையம் மூலம் உயர்கல்வியில் சேரவும், அன்பு கரங்கள் என்ற திட்டத்தின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாணவர்களுக்கான கல்வி கடன் ரூ.100 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதுவரையில் இம் மாவட்டத்தில் 4711 மாணவர்களுக்கு ரூ.114.29 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களை உயர்கல்வில் சேர்க்கும் வகையில் 13.9.2025 அன்று சிறப்பு கல்விக்கடன் முகாம் நடத்தப்பட்டு அதில் 85 மாணவர்களுக்கு ரூ.8.37 கோடியும், 24.10.2025 அன்று நடைபெற்ற முகாமில் 109 மாணவர்களுக்கு ரூ.7.35 கோடி வழங்கப்பட்டுள்ளது.

வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சிக்கென 2734 மாணவர்கள் விண்ணப்பித்ததில் 916 மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2188 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 20242025 ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு பயின்ற 11064 அரசுபள்ளி மாணவர்களையும் உயர்கல்வியில் சேர்க்கும் முயற்சியாக உயர்வுக்கு படி முகாமானது திருச்சி மற்றும் இலால்குடி கோட்டங்களில் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு நேரடி சேர்க்கை வழங்கப்பட்டது. உயர்வுக்குபடி முகாமிற்கு பிறகு உயர்கல்வியில் சேராத மாணவர்களை அடையாளம் கண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆலோசனையின் பேரில் பள்ளிதலைமையாசிரியர், உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர், ஶ்ரீ ஆ ஊ தலைவர், கிராம நிர்வாக அலுவலர், வார்டு உறுப்பினர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் அடங்கிய குழு அமைத்து அவர்களது வீட்டிற்கே சென்று உயர்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து உயர்கல்வியில் சேர்ந்திட வழிவகுத்ததின் விளைவாக மொத்தம் உள்ள 11064 அரசுபள்ளி மாணவர்களில், கலை அறிவியல் பிரிவில் 6220 மாணவர்களும், பொறியியல் பிரிவில் 2275 மாணவர்களும், மருத்துவப்பிரிவில் 317 மாணவர்களும், மேலாண்மை பட்ட பிரிவில் 300 மாணவர்களும், கணினி பிரிவில் 451 மாணவர்களும், செவிலியர் பிரிவில் 210 மாணவர்களும், பல்தொழில்நுட்ப பிரிவில் 225 மாணவர்களும், பாராமெடிக்கல் பிரிவில் 244 மாணவர்களும், சட்டத்துறையில் 26 மாணவர்களும், தொழிற்கல்வி பிரிவில் 40 மாணவர்களும், வேளாண்மை பிரிவில் 77 மாணவர்களும் மற்றும் இதர பிரிவில் 479 மாணவர்களும் என ஆக மொத்தம் 10864 மாணவர்கள் (98 சதவீதம்) உயர்கல்வியில் சேர்த்து மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன் ,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் ஆய்வு.



சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்,சேலம் மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன்,வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான ஆய்வுக் கூட்டம்,மாவட்ட ஆட்சியர் பிருந்தாதேவி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில்,

திமுக சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் ஷி ஸி சிவலிங்கம் அவர்களோடு இணைந்து சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி எம் செல்வகணபதி,வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான முக்கிய கருத்துக்களை வழங்கினார்.

# பாஜக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்...!




வந்தவாசி, அக் 31:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் பாஜக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட பொதுச் செயலாளர் முத்துசாமி தலைமை தாங்கினார். மாநில செயற்குழு உறுப்பினர் பாஸ்கரன், பொதுச் செயலாளர் குருலிங்கம் சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் நவநிதி, சமூக ஊடகப்பிரிவு குணசேகரன், மாவட்ட செயலாளர்கள் ராஜா மான் சிங், முன்னாள் செயற்குழு உறுப்பினர் துரை நாடார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர தலைவர் சுரேஷ் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக, மாவட்ட தலைவர் கவிதா வெங்கடேசன் பொதுச் செயலாளர் வெங்கட்ராமன் ஆகியோர் பங்கேற்று ஆளும் கட்சியை எதிர்த்தும், நகராட்சியின் அலட்சியப் போக்கை கண்டித்தும் கண்டன உரையாற்றினர். மேலும் கட்சியின் நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர். இறுதியில் பாஜக பொறுப்பாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.

# 01.11.2025 உள்ளாட்சிகள் தினத்தன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தகவல்.

திருச்சி. அக்.31–

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்ட 404 கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர;வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல் (2025 26ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விபரம்), கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, ஊரக பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்;ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் (202526), அனைத்து கிராம அண்ணா மறுமலர;ச்சி திட்டம் II, தூய்மை பாரத திட்டம் (ஊரகம்) மற்றும் இதர பொருள்கள் குறித்து கிராம சபையில் விவாதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 404 கிராம ஊராட்சிகளிலும், 01.11.2025 உள்ளாட்சிகள் தினத்தன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் தெரிவித்துள்ளர்.

# பேரம்பாக்கத்தில் மின்சாரம் தாக்கி அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்த திமுக நிர்வாகி பலி

## மப்பேடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை :

திருவள்ளூர் அக் 31 :

திருவள்ளூர் அடுத்த பேரம்பாக்கம் கே.கே.நகர் 1 வது தெருவை சேர்ந்தவர் விவசாயி சிலம்பரசன் (38). இவர் திமுகவில் இளைஞர் அணி அமைப்பாளராகவும் இருந்தார். இவருக்கு திருமணமாகி பவானி என்கிற மனைவியும், 6 வயதில் ஒரு பெண் குழந்தையும் உள்ளனர். இந்நிலையில் நேற்று காலை சிலம்பரசன் வழக்கம் போல பேரம்பாக்கம் அருகே உள்ள இருளஞ்சேரி நாகாத்தம்மன் கோவில் அருகே உள்ள தனது கடையை பார்வையிட சென்றார்.

அப்போது மழையின் காரணமாக அங்கு அறுந்து விழுந்து கிடந்த மின் கம்பியை அவர் எதிர்பாராத விதமாக மிதித்துள்ளார். இதில் அவர் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்து போனார். இந்த சம்பவம் குறித்து மப்பேடு போலீசார் இறந்த சிலம்பரசன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேறும் கழிவால் பாதிக்கப்படும் விவசாயிகள்

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த செம்மேடு பகுதியில் தனியார் நிறுவனத்தின் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை இயக்கி வருகிறது இந்த சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேறும் ஆலை கழிவுகள் மழைநீரில் கலந்து சர்க்கரை ஆலை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள நிலங்களில் சென்று பயிர்கள் நாசமாவாதாகவும் துர்நாற்றம் மற்றும் வியாதிகள் ஏற்படுகிறது என்று விவசாயிகள் புலம்பும் நிலை ஏற்பட்டுள்ளது இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேட்டி அளித்தனர்

இந்த நிகழ்ச்சியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் . செஞ்சி தொகுதி பொறுப்பாளர் ராசநாயகம் செஞ்சி ஒன்றிய செயலாளர் ராஜா நீர்நிலை பாதுகாப்பு இயக்க தலைவர் வையவன் மற்றும் கலத்தம்பட்டு செம்மேடு பாலப்பாடி விவசாயிகள் கலந்து கொண்டனர்

# 2026 தேர்தலில் திமுக படுதோல்வி அடையும்.

## பாமக தலைவர் அன்புமணி நம்பிக்கை



மேட்டூர்: அக்.31–

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக படுதோல்வி அடையும் என்று பாமக தலைவர் அன்புமணி கூறினார்.

சேலம் மாவட்டம் மேட்டூரில் பாமக தலைவர் அன்புமணி தலைமையில் தமிழக மக்கள் உரிமை மீட்பு நடை பயணம் நேற்று நடந்தது. முன்னதாக, உயர்மட்ட மேம்பாலம் கட்ட கோரிக்கை எழுந்துள்ள கொளத்தூரை அடுத்த கோட்டையூரிலும், செட்டிப்பட்டியில் புதிய நீரேற்று திட்டம் அமையவுள்ள இடத்திலும் அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அன்புமணி கூறியதாவது: சேலம் மாவட்டம் கோட்டையூர் தருமபுரி மாவட்டம் ஒட்டனூர் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைக்கவேண்டும் என்பது மக்களின் 75 ஆண்டுகால கோரிக்கையாகும். இது தொடர்பாக 2022ல் முதல்வர் அறிவிப்பு வெளியானது.

இந்த மேம்பாலம் கட்ட ரூ.600 கோடி வரை செலவாகும். இந்தப் பாலத்தை ஒருமுறை கட்டினால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1,200 கோடி வரை மீதமாகும். 45 மாதங்களுக்கு முன்பு அறிவிப்பை செய்துவிட்டு, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கிடப்பில் போட்டுள்ளனர். திமுக அரசு அறிவிப்பை மட்டும்தான் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் புதிதாக 30 மணல் குவாரிகளை தொடங்கவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது. பெரிய ஊழல், முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் இந்த அறிவிப்பை திரும்பப் பெற வேண்டும். சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தை மேற்கொள்ளக் கூடாது என்று கூறுபவர்கள், கள்ள வாக்குகள் செலுத்துவதற்கு உடந்தையாக இருப்பவர்கள்தான்.

சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக வரும் நவம்பர் 2ம் தேதி நடைபெறவிருப்பது அனைத்துக் கட்சி கூட்டம் கிடையாது. திமுக கூட்டணி கூட்டம். 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக படுதோல்வி அடையும். இவ்வாறு அன்புமணி கூறினார்.

# பெற்றோர்கள் பெண் குழந்தைகளை கண்காணிக்க வேண்டும்: அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பேச்சு





வந்தவாசி, அக் 31:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த பொன்னூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கான 'பெண் கல்வியும் பாதுகாப்பும்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். ஶ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், கலாம் பவுண்டேஷன் நிர்வாகி சீ.கேசவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தமிழாசிரியை எஸ்.உமா தேவி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் கே.மங்கையர்க்கரசி பங்கேற்று, இன்றைய சூழலில் பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், பெண்களின் நிலைப்பாடுகளை பற்றியும், போக்சோ விழிப்புணர்வு பற்றிய பல்வேறு கருத்துக்களையும் சிறப்புரை ஆற்றினார். மேலும் சப் இன்ஸ்பெக்டர் சாந்தி செல்போனில் சிக்கி தவிக்கும் இன்றைய மாணவிகளின் நிலைப்பாட்டை விளக்கினார். மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் பள்ளி ஆசிரியர்கள் மாணவிகள் பங்கேற்றனர். இறுதியில் உடற்கல்வி ஆசிரியர் எஸ்.ஜோதி நன்றி கூறினார்.


# செஞ்சி அடுத்த சொக்கனந்தல் சாலை சீர் அமைக்க பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் கோரிக்கை



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம்: சத்தியமங்கலம் கூட்ரோட்டிலிருந்து சொக்கனந்தல் கிராமம் செல்லும் சாலை கடந்த சில வருடங்களாக கடும் சேதமடைந்து, பள்ளி மாணவர்கள் சிரமப்பட்டு செல்லும் சாலையாக மாறியுள்ளது. இதனால், தினமும் இந்தச் சாலையை பயன்படுத்தும் பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர் இது உடனடியாக சரி செய்து தரக்கோரி பள்ளி மாணவர்கள் ஊர் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

## சேலத்தில் தடதடக்கும் தண்ணீர் அரசியல்.

# திமுகவுக்கு இக்கட்டை உண்டாக்கும் மேட்டூர் உபரி நீர் பஞ்சாயத்து.



சேலம், அக். 31–

,மேட்டூர் அணை நிரம்பி வழியும் போதெல்லாம் ஏராளமான டிஎம்சி நீர் வலுக்கட்டாயமாக கடலுக்கு அனுப்பப்படும்.

அப்போதெல்லாம், சேலம் மாவட்ட மக்கள் மத்தியில் கோபம் கொப்பளித்து அடங்கும். இந்த நிலையில், சேலம் மாவட்டத்துக்காரரான பழனிசாமி தமிழக முதல்வரானதும் மேட்டூர் உபரிநீரை தனது எடப்பாடி தொகுதி உட்பட 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு பயன் தரும் விதமாக 100 ஏரி திட்டத்தை அறிவித்தார்.

இதற்காக ரூ.565 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு மளமளவென பணிகள் தொடங்கப்பட்டன. கடந்த அதிமுக ஆட்சி முடிவடையும் முன்பாகவே நீரேற்று நிலையம் அமைத்து, முதல்கட்டமாக 6 ஏரிகளுக்கு மேட்டூர் உபரி நீரும் சென்று சேர்ந்தது. இதனால் ஜெயலலிதா இல்லாதபோதும் கடந்த தேர்தலில் அதிமுகவுக்கு சேலம் மாவட்ட மக்கள் அமோக வெற்றியைக் கொடுத்தனர்.

இப்போது, அந்த 100 ஏரி திட்டத்தை வைத்து, அதிமுகவும், வசிஷ்ட நதி வரை மேட்டூர் அணையின் உபரி நீரை கொண்டு சென்று, சேலம் மாவட்டம் முழுமைக்கும் பாசனம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பாமகவும் அரசியல் செய்ய ஆரம்பித்திருப்பது ஆளுங்கட்சிக்கு இக்கட்டை உருவாக்கி வருகிறது.

கடந்த வாரம் எடப்பாடிக்கு வந்திருந்த பழனிசாமி, 100 ஏரி திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர், 'அதிமுக ஆட்சியிலேயே 6 ஏரிகளுக்கு மேட்டூர் உபரி நீரை கொடுத்து விட்டோம். ஆனால், திமுக ஆட்சிக்கு வந்து 5 ஆண்டு நிறைவடையப் போகும் நிலையில், இதுவரை 59 ஏரிகளுக்கு மட்டுமே மேட்டூர் உபரிநீர் வந்துள்ளது.

அதிமுகவுக்கு நற்பெயர் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக இத்திட்டத்தை திமுக அரசு முடக்கிவிட்டது. அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவோம்' என்று சூளுரைத்தார். அதேபோல் சேலம் மாவட்டத்தில் 4 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாமக தலைவர் அன்புமணி, 'மேட்டூர் உபரிநீர் திட்டத்தில் சரபங்கா, திருமணிமுத்தாறு, வசிஷ்ட நதி ஆகிய வற்றையும் இணைத்து, மாவட்டம் முழுமைக்குமான பாசனம் மற்றும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும்.

வசிஷ்ட நதிக்கு காவிரி உபரிநீரை கொண்டு வந்தால், அதன்மூலம் கடலூர் மாவட்டமும் பயனடையும்' என்றார். இப்படியாக, மேட்டூர் தண்ணீரை வைத்து சேலம் மாவட்டத்தின் 11 தொகுதிகளின் தேர்தல் களத்தை இயக்க ஆரம்பித்திருக்கின்றன எதிர்க்கட்சிகள்.

இதுகுறித்து பொதுப் படையாக பேசிய சேலம் மாவட்ட விவசாயிகள் சிலர், 'மேட்டூர் அணையை ஒட்டியிருந்தும் காவிரி நீர் கிடைக்காத கொளத்தூர் வட்டார மக்கள், தோனிமடுவு திட்டத்தை செயல்படுத்த தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். மேட்டூர் உபரிநீரை ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர் வட்டங்களுக்கும், கொளத்தூர் பகுதிகளுக்கும் கொண்டு செல்ல ஈரோடு மாவட்ட திமுகவினர் ஆர்வமாக இருக்கின்றனர்.

மேட்டூர் உபரிநீர் திட்டத்தால், சேலம் மாவட்டத்தில் 4 தொகுதிகளில் உள்ள அனைத்து கட்சியினரும் பயனடைந்துள்ளனர். மாவட்டத்தின் எஞ்சிய தொகுதிகளுக்கும் மேட்டூர் உபரி நீர் கிடைக்க வேண்டும் என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பு. எனவே இம்முறையும் சேலம் மாவட்ட தேர்தல் முடிவுகளில் மேட்டூர் உபரி நீர் திட்டத்தின் பங்கு பிரதானமாக இருக்கும்' என்றனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் தமிழக முதல்வர் முக ஸ்டாலின் உத்தரவின்படி திமுக விழுப்புரம் வடக்கு மாவட்டம் சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது என்ற முழக்கத்துடன் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி என்ற கொள்கையில் செயற்குழு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது . இந்த நிகழ்ச்சியை காணொளி வாயிலாக எம் ஆர் கே பன்னீர்செல்வம் துடங்கிவைத்து பேசினார். இதில் மயிலம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா மாசிலாமணி முன்னாள் எம்எல்ஏ கலநாதுக்கொண்டு சிறப்பித்தார் .பின்னர் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் செஞ்சி கே எஸ் மஸ்தான் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார் இந்த நிகழ்ச்சியில் செஞ்சி பெருந்தலைவர் விஜயகுமார் மற்றும் ஏராளமான தொண்டர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருவள்ளூரில் பேறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு மாரத்தான் போட்டிக்கு இணையான நெடுந்தூர ஓட்டப்போட்டி மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் அக் 31 :

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருவள்ளூர் மாவட்ட பிரிவின் சார்பாக பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு வருகிற 03.11.2025 அன்று காலை 6 மணிக்கு திருவள்ளூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலருக்கும் தனித்தனியாக மாரத்தான் போட்டிக்கு இணையான நெடுந்தூர ஓட்டப்போட்டிகள் நடைபெறவுள்ளன. மேலும் 17 முதல் 25 வயதிற்குட்பட்ட ஆண்கள் 8.கி.மீ துரமும் பெண்கள் 5.கி.மீ துரமும் மற்றும் 25 வயதிற்கு மேப்பட்ட ஆண்கள் 10.கி.மீ துரமும் பெண்கள் 5.கி.மீ துரமும் நடைபெறவுள்ளன.

இப்போடியில் முதல் இடத்தை பெறும் வீரர், வீராங்கனைகளுக்கும் ரூ.5000 வீதமும், இரண்டாம் இடத்தை பெறும் வீரர், வீராங்கனைகளுக்கும் ரூ.3000 வீதமும், மூன்றாம் இடத்தை பெறும் வீரர், வீராங்கனைகளுக்கும் ரூ.2000 வீதமும், நான்காம் இடம் முதல் பத்தாம் இடம் வரை பெறும் ஒவ்வொரு வீரர், வீராங்கனைகளுக்கும் ரூ.1000 வீதமும் மொத்த பரிசு தொகை ரூ.68000 மும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவ / மாணவியர்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட வயதுக்குள் உள்ள பொதுமக்கள் அனைவரும் வருகின்ற 02.11.2025 அன்று மாலை 6 மணிக்குள் மாவட்ட விளையாட்டு அரங்கதிற்கு வருகை தந்து தங்கள் பெயரில் உள்ள வங்கி கணக்கின் முதல் பக்கத்தின் நகல், வயது சான்றிதழ், ஆதார் கார்டு ஆகியவைகளை சமர்பித்து தங்களுடைய பெயர்களை பதிவு செய்திட வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட தடகள பயிற்றுநர் அ.லாவண்யா அவர்களை 8072908634 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் இளம்நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 2019 குறித்த புத்தாக்கப்பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது.



சேலம். அக். 31–

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் இளம்நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 2019 குறித்த புத்தாக்கப்பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (30.10.2025) நடைபெற்றது. இப்புத்தாக்கப்பயிற்சியில் சேலம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் பி.கணேஷ்ராம் அவர்கள் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் குறித்து எடுத்துரைத்தார்கள். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

சேலம் மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 2019 ன் படி இளம்நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒருநாள் புத்தாக்கப்பயிற்சி இன்றைய தினம் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம் வாயிலாக இப்புத்தாக்கப்பயிற்சி வழங்கப்படுகிறது.

நுகர்வோர் பாதுகாப்புச்சட்டமானது நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல், குறைகளைத் திறம்பட நிவர்த்தி செய்தல், தகராறுகளுக்கு விரைவான மற்றும் பயனுள்ள தீர்வு, ஒழுங்குமுறை ஆணையத்தை நிறுவுதல், நவீன சந்தைகளுக்கு ஏற்ப தகவமைத்தல், நுகர் வோருக்கு அதிகாரமளித்தல், நியாயமற்ற வணிக நடை முறைகளைக் கட்டுப்படுத்துதல், நுகர்வோர் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டதாகும். இன்றைய பயிற்சிக்கூட்டத் தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களில் உள்ள மாற்றங்கள், நுகர்வோர் உரிமைகளான பாதுகாப்புக்கான உரிமை, தகவல் அறியும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கருத்து கேட்கும் உரிமை, குறை தீர்க்கும் உரிமை, நுகர்வோர் கல்வி உரிமைகள், வணிக நடைமுறைகள், முக்கிய விதிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம், நுகர்வோர் குறைதீர் மன்றங்கள், நுகர்வோர் பாதுகாப்புக்குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

நுகர்வோர் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ புகாரளிக்கும் விதிமுறைகள் குறித்தும், புகார்களை மின்னணு முறையில் புகாரளிக்கும் வழிமுறைகள் குறித்தும், நுகர்வோர் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் குற்றத்திற்கான தண்டனைகள் குறித்தும், வழக்குகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இச்சட்டத்தின்படி கலப்படம் செய்யப்பட்ட பொருட்களை விற்றல், உற்பத்தி செய்தல், விநியோகம் செய்தல் உள்ளிட்ட குற்றங்களுக்கு 6 மாதம்வரை சிறைதண்டனையும், 6 மாதம் முதல் 7 ஆண்டுகள் வரையும் அபராதமாக 1 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை அபராதமும் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்புத்தாக்கப்பயிற்சியில் பங்கேற்றுள்ள அனைவரும் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் குறித்த விழிப்புணர்வுகளை தங்கள் அருகாமையில் உள்ள அனைவருக்கும் அதன் பயன்கள் குறித்து எடுத்துரைத்திட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா. ரவிக்குமார், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் .கு.மோகனசுந்தரம், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.வ.சீனிவாசன் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தேவர் நினைவிடத்தில் சசிகலா உடன் ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் சந்திப்பு",

"பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரின் 118வது ஜெயந்தி மற்றும் 63வது குருபூஜை விழாவையொட்டி பசும்பொன் தேவர் நினைவிடத்தில் அரசியல் தலைவர்கள், பல்வேறு அமைப்பினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர்.இந்நிலையில் தேவர் நினைவிடத்தில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் மூவரும் ஒன்றிணைந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதைத்தொடர்ந்து டி.டி.வி., ஓ.பி.எஸ்., செங்கோட்டையன் ஒன்றாக செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது, அ.தி.மு.க. எங்களுக்கு எதிரி இல்லை. இ.பி.எஸ். மட்டும் தான் எங்களது எதிரி. இ.பி.எஸ்.ஐ வீழ்த்தும் வரை ஓய மாட்டோம் என்று டி.டி.வி.தினகரன் கூறினார். இதையடுத்து டி.டி.வி.தினகரன் புறப்பட்டுச் சென்ற நிலையில் ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் இருவரும் சிறிதுநேரம் காத்திருந்து சசிகலாவை சந்தித்தனர். அப்போது ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் இருவரும் சசிகலாவிடம் பரஸ்பரம் நலம் விசாரித்தனர். பின்னர் அவர்களுடன் சசிகலா சிறிது நேரம் பேசினார்.பின்னர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய வி.கே.சசிகலா தரையில் அமர்ந்து வழிபாடு செய்தார்.",

# தமிழ்நாட்டில் மேலும் 2 சிப்காட் தொழில் பூங்கா அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி சிப்காட் நிறுவனம் விண்ணப்பம்

சென்னை: அக்.31–

தமிழ்நாட்டில் மேலும் 2 சிப்காட் தொழில் பூங்கா அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி சிப்காட் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. தமிழ்நாடு, நாட்டிலேயே கல்வி வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சியில் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களை காட்டிலும் கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி உள்ளிட்டவைகளில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 2021ம் ஆண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சிபொறுப்பேற்றபிறகு பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

மேலும் தமிழகம் தொழில்வளர்ச்சியில் முன்னணி மாநிலமாக மாற்றவும், தமிழக இளைஞர்களுக்கு பணி வாய்ப்புகள் கிடைக்கவும், 2030ம் ஆண்டிற்குள் தமிழகத்தை பொருளாதாரத்தில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மாற்றும் பெறுவதற்கான முயற்சியாக தொழில் முதலீடுகளை ஈர்த்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, ஏராளமான சிப்காட் எனப்படும் தொழிற் பூங்காக்கள் அமைக்கப் பட்ட வருகின்றனர்.


தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் 23 சிப்காட் தொழிற்பூங்காக்களே இருந்த நிலையில், திமுக ஆட்சி பொறுப்பேற்ற 4 வருடங்களிலேயே 30க்கும் மேற்பட்ட சிப்காட் பூங்காக்கள் இதுவரை திறக்கப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியை அதிகரிக்கும் வகையில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிப்காட் தொழில் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து எடுத்துவருகிறது.தற்போது 40 தொழில் பூங்காக்கள் உள்ள நிலையில் மேலும் 21 பூங்காக்களை 21,404 ஏக்கர் பரப்பளவில் அமைக்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

இதன்படி காஞ்சிபுரம், மதுரையில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது. புதிய விமான நிலையம் அமைய உள்ள பரந்தூருக்கு அருகே 422.33 ஏக்கரில் ரூ.530 கோடியில் சிப்காட் தொழில் பூங்கா அமைகிறது. காஞ்சிபுரம் சிப்காட் தொழில் பூங்கா மூலம் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மதுரை மாவட்டத்தில் வஞ்சிநகரம், கொடுக்கம்பட்டி, பூதமங்கலம் ஆகிய 3 கிராமங்களில் 278.26 ஏக்கரில் சிப்காட் பூங்கா அமைகிறது. ரூ.68 கோடியில் அமைய உள்ள சிப்காட் தொழில் பூங்கா மூலம் 4000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

# சுமார் ரூ.3.5 கோடி மதிப்பிலான மெத்தபெட்டமைன் போதைப் பொருளை கடத்திய நைஜீரியா நாட்டைச் சேர்ந்த இளைஞரை போலீசார் கைது

திருவள்ளூர் அக் 31 :

திருவள்ளூர் வழியாக மெத்தபெட்டமைன் போதைப்பொருள் கடத்தப்படுவதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தா சுக்லா உத்தரவின் பேரில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் காவல் துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.



அப்போது திருவள்ளூர் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் வெங்கத்தூர் பகுதியில் மணவாளநகர் காவல் நிலைய ஆய்வாளர் ஃபாருக் தலைமையிலான போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்ட போது புல்லட் வாகனத்தில் வந்த நபரை நிறுத்தி சோதனை செய்தபோது அவரிடம் இருந்து சுமார் ரூ.3.5 கோடி மதிப்பிலான 35 கிராம் மெத்தபட்டமைன் போதை பொருளை கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து அந்த நபரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது நைஜீரிய நாட்டைச் சேர்ந்த மைக்கேல் நம்பி எனவும் தெரிய வந்ததையடுத்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய பின் புழல் சிறையில் அடைத்துள்ளனர். வாகன சோதனையின் போது நைஜீரிய நாட்டைச் சேர்ந்த இளைஞரிடம் ரூ.3.5 கோடி மதிப்பிலான போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட சம்பவம் திருவள்ளூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# செஞ்சி அருகே சொக்கனந்தல் சாலை சேதம் பொதுமக்கள் நூதன போராட்டம்



செஞ்சி, அக், 31

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்தடு சொக்கணந்தல் கிராமத்தில் பல குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இந்த கிராமத்தின் சாலை வழியாக மல்லாண்டி, மேல் புதுப்பட்டு, உடையந்தாங்கல், கல்தம்பட்டு என சுற்றுவட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து

பள்ளி, கல்லூரி மாணவர்கள்,வேலைக்கு செல்பவர்கள் மருத்துவ அவசர தேவைக்கு பயன்படுகிறேன் முக்கிய சாலையாக உள்ளது.

15 வருடத்திற்கு முன்பாக போடப்பட்ட சாலை தற்போது பெய்துவந்த பருவ மழை காரணமாக சொக்கனந்தல் சாலை முழுவதும் சேறும், சகதியுமாக மாறி விட்டது. இதனால் அந்த சாலையை பயன்படுத்த முடியாத நிலையில் பொதுமக்கள் தவித்து வருகிறார்கள்.

இருசக்கர வாகனத்தில் செல்பவர்களும் கூட தடுமாறி கீழே விழும் நிலையும் ஏற்படுகிறது. இதனால் மழைநீர் கழிவு நீராக சாலைகளில் ஆங்காங்கே தேங்கியுள்ளதால் நோய் தொற்று பரவும் அபாயமும் உள்ளது. இதுதொடர்பாக புகார் அளித்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதை கண்டித்தும், புதிய தார் சாலை அமைக்க வலியுறுத்தியும் கிராம மக்கள் சேரும் சகதியுமாக மாறிய மண் சாலையில் நாற்று நட்டு நூதனப்போராட்டத்தில் ஈடுபட்டனர். நாற்று நடவு செய்து தங்களின் துயரங்களை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர்.




பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/ நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித தலைவர் இராஜேஸ்குமார் நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை ஒன்றியம், ராஜபாளையம் கார்கூடல்பட்டி மகளிர் சுய உதவிக்குழு கட்டிடத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்னார்.




அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கான கூராய்வுக் கூட்டம் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் புதுக்கோட்டை விஜயா தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் .இரத்தினசாமி, ஆணைய உறுப்பினர்கள் முனைவர்.உஷா நந்தினி . செல்வேந்திரன் டாக்டர்.மோனோமடில்டா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

# திருவள்ளூரில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான ஆலோசனை கூட்டம்



திருவள்ளூர் அக் 31 :

திருவள்ளூர் ஆட்சியர் அலுவலக வளாக கூட்டரங்கில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான மு.பிரதாப் தலைமை பேசினார்.

அப்போது, அவர் பேசியதாவது தேர்தல் ஆணையம் 1.1.2026 தேதியை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 படிவங்கள் அச்சிடுதல், பயிற்சி 28.10.2025 முதல் 3.11.2025 வரையிலும் வழங்கப்படுகிறது. வீடு தோறும் எண்ணிக்கை கட்டம் நவ.4 இல் தொடங்கி, டிச.4 ஆம் தேதி வரையிலும் நடைபெற உள்ளது. தொடர்ந்து டிச.9 இல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், டிச.9 முதல், அடுத்தாண்டு ஜன 8 வரையில் உரிமை கோரல்கள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலமாகும். பின்னர் விசாரணை அறிவிப்பு சார்பு செய்தல், விசாரணை மற்றும் சரிபார்ப்பு டிச.9 முதல் அடுத்தாண்டு ஜன.31 வரையிலும் மேற்கொண்டு, இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.7 இல் வெளியிடப் படவுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் 10 சட்டப்பேரவை தொகுதிகளில் 35.82 லட்சம் வாக்காளர்களுக்கும், கணக்கெடுப்பு படிவம் அந்தந்த வாக்காளர்கள் வசிக்கும் இல்லங்களில், வாக்குச் சாவடி நிலை அலுவலர் மூலம் நவ.4 முதல் டிச.4} ஆம் தேதி வரையில் கொடுத்து பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்படும். அதில் வாக்காளரது பெயர், புகைப்படம், மாநிலம், தொகுதி, பாகம் எண், பாகத்தில் வரிசை எண் ஆகியவை அச்சிடப்பட்டிருக்கும். அந்த படிவத்தில் அதற்கான இடத்தில் வாக்காளர் அவரது பிறந்ததேதி, கைபேசி எண், பெற்றோர் பேர்கள், ஆதார் எண் குறிப்பிடுவது அவசியம். மேலும், வாக்காளர் 40 வயதுக்கு மேல் இருந்தால், அதாவது அவர் 2002 முதல் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால், அப்பட்டியலின் தொகுதி எண், பாகம் எண், வ.எண் (இதை www. elections.tn.gov.n ™ பெறலாம்) ஆகியவற்றுடன் பெயர் மற்றும் இதர விவரங்கள் குறிப்பிடலாம். மேலும், வாக்காளர் 40 வயதுக்கு குறைவாகவோ அல்லது 2002 மற்றும் 2005 ஆம் ஆண்டு சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால் வாக்காளரின் தந்தை அல்லது தாயார், உறவினர் பெயர் மேற்படி வாக்காளர் பட்டியலில் இருந்தால் அவர்களின் பெயர், தொகுதி எண், பாகம் மற்றும் வரிசை எண் ஆகியவைகளை படிவத்தில் பூர்த்தி செய்து அளிக்கலாம்.

மேற்படி உறவினர்களின் பெயர் இல்லாவிட்டால், படிவத்தில் தற்போதைய புகைப்படத்துடன் கணக்கெடுப்பு படிவத்தை பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் வரும் டிச.4 ஆம் தேதிக்குள் அளிக்கலாம். பூர்த்தி செய்த படிவங்கள் https://voters.eci.gov.in என்ற இணையதள முகவரியிலும் பதிவேற்றம் செய்யலாம். எனவே வாக்காளரிடமிருந்து பெறப்பட்ட படிவங்களை வைத்துக்கொண்டு டிச.9 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். மேலும், 2002 / 2005 சிறப்பு தீவிர திருத்த பட்டியலில் வாக்காளர் பெயரோ அல்லது அவரது உறவினர் பெயரோ வழங்காத பட்சத்தில், அந்த வாக்காளர்கள் பெயரை இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது குறித்து டிச.9 முதல் அடுத்தாண்டு ஜன.31 வரை தொடர்புடைய சட்டப்பேரவை தொகுதியின் வாக்காளர் பதிவு அலுவலர் விசாரணை செய்து இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும். மேலும், டிச.9}முதல் அடுத்தாண்டு ஜன.8 வரையிலான காலத்தில் வரைவு வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, பெயர் சேர்த்தல், நீக்கல் தொடர்பான படிவங்கள் 6 மற்றும் 7 இல் பெறப்படும்.

இச்சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியல் தொடர்பாக பொதுமக்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் புகார்களை தெரிவிக்க மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சியர் அலுவலகத்திலும், 10 சட்டப்பேரவை தொகுதிகளுக்குள்பட்ட வாக்காளர் பதிவு அலுவலகத்திலும் தேர்தல் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் மாவட்ட தேர்தல் அலுவலர், தேர்தல் உதவி மையம், ஆட்சியர் அலுவலகத்துக்கு7305158550 என்ற கைப்பேசி எண்ணிலும், அதேபோல் வாக்காளர் பதிவு அலுவலர் தேர்தல் உதவி மையங்கள் சட்டப்பேரவை தொகுதி வாரியாக கும்மிடிப்பூண்டி 7200133851, பொன்னேரி 9150799790, திருத்தணி 8610645913, திருவள்ளூர் 9445900494, பூந்தமல்லி 9789254821, ஆவடி 8925902432, மதுரவாயல் 9445190091, அம்பத்தூர் 9445190207, மாதவரம் 9003595898, திருவொற்றியூர் 9445190201 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

எனவே, வாக்காளர்கள் இச்சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை முழுமையாக பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை சேர்த்து பயன்பெறலாம் என அவர் தெரிவித்தார். இதில் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஸ்ரீராம், வட்டாட்சியர் (தேர்தல்) சிவகுமார், முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா(அதிமுக), வழக்கறிஞர் அணி (திமுக) பி.கே.நாகராஜ், பா.ஜ.க மாவட்ட தலைவர் அஷ்வின் என்ற ராஜசிம்மா, மாவட்ட பொதுச்செயலாளர் பாலாஜி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# வால்பாறைக்கு சுற்றுலா செல்ல நவ.1ம் தேதி முதல் இபாஸ் நடைமுறை அமல்!

கோவை: அக்.31–

வால்பாறைக்கு சுற்றுலா செல்ல நவ.1ம் தேதி முதல் இபாஸ் நடைமுறை அமல்படுத்தப்படுகிறது. கோவை மாவட்டம் வால்பாறைக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்நிலையில், வரும் நவம்பர் 1ந்தேதியில் இருந்து வால்பாறைக்கு வரும் சுற்றுலா பயணிகள் அனைவரும் கட்டாயம் இபாஸ் பெற வேண்டும் என கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது; சென்னை ஐகோர்ட்டு வெளியிட்ட உத்தரவின்படி கோவை மாவட்டம் வால்பாறைக்கு வரும் நவம்பர் 1ம் தேதி முதல் இபாஸ் நடைமுறை அமல்படுத்தப்படுகிறது.

எனவே வால்பாறைக்கு வரும் சுற்றுலா பயணிகள் கட்டாயம் இபாஸ் பெற்று பயணம் செய்ய வேண்டும். சுற்றுலா பயணிகள் தங்களின் வாகனங்களுக்கு இபாஸ் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். மேலும் ஆழியார், சோலையார் சோதனை சாவடிகளிலும் இபாஸ் பெறலாம். இபாஸ் இல்லாத வாகனம் வால்பாறைக்குள் அனுமதிக்கப்படாது. வால்பாறைக்கு வரும் சுற்றுலா பயணிகள் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை எடுத்து வரக் கூடாது. சுற்றுலா பயணிகள் இபாஸ் பெற்று வருவதை கண்காணிக்க வருவாய்த் துறையினர், வனத்துறையினர், காவல்துறையினர் மற்றும் உள்ளாட்சித்துறையினர் சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “த.வெ.க.வுடன் கூட்டணி பேச்சு நடத்தவில்லை : எடப்பாடி பழனிசாமி”

மதுரை, அக். 31–

“மதுரை மாவட்டம் கப்பலூரில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:* தமிழக வெற்றிக் கழகத்துடன் இதுவரை கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை.* அ.தி.மு.க.வும் த.வெ.க.வுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. த.வெ.க.வும் அ.தி.மு.க.வுடன் கூட்டணி பேச்சு நடத்தவில்லை.* 2026ம் ஆண்டு தனிப்பெரும்பான்மையுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும்.எடப்பாடி பழனிசாமி பிரசார கூட்டத்தில் சிலர் த.வெ.க. கொடியுடன் பங்கேற்றது தொடர்பான செய்தியாளர்களின் கேள்விக்கு, வீட்டிற்கு வரும் விருந்தாளியை வரவேற்பது போல் தங்கள் ஊருக்கு வந்த என்னை த.வெ.க. தொண்டர்கள் வரவேற்றுள்ளனர் என்று அவர் பதில் அளித்தார்.”,



ஈரோடு மாவட்டம் சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி கல்லூரி கலைத் திருவிழாவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பேசினார்.

# ஈரோடு வெள்ளோடு அருகே பயங்கர சம்பவம்... சொத்துக்காக பெற்ற தாயை அடித்துக் கொன்ற மகன்...

ஈரோடு அக். 31

ஈரோடு அருகே உள்ள வெள்ளோடு பகுதியில் சொத்து பிரச்சனையில் தன்னுடைய தாயை அடித்துக் கொன்ற மகனை போலீசார் தேடி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே உள்ள வெள்ளோடு முகாசி பிடாரியூர் பகுதியை சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி (70) இவரது மனைவி தனபாக்கியம் (65) இவர்கள் விவசாய தொழில் செய்து வருகின்றனர்.

இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இந்த நிலையில், சொத்து பிரச்சனை காரணமாக இளைய மகன் சந்தோஷ் (40) என்பவருக்கும் அவரின் பெற்றோர்களுக்கும் முன்விரோதம் இருந்து வந்ததாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு தாய் தனபாக்கியம் மகன் சந்தோஷ் ஆகியோரிடையே சொத்து பிரச்சனை குறித்து கடும் வாக்குவாதம் நடந்துள்ளது. இதில் ஆத்திரமடைந்த மகன்



சந்தோஷ் வீட்டில் இருந்த சுத்தியல் எடுத்து பெற்ற தாய் என்றும் பாராமல் தன பாக்கியத்தை கடுமையாக தலை மற்றும் முகத்தில் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே தன பாக்கியம் உயிரிழந்தார்.

இது குறித்து தகவல் அறிந்த ஈரோடு மாவட்ட போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

கொலை செய்யப்பட்ட தனபாக்கியத்தின் உடலை கைப்பற்றிய போலீசார் உடல்கூறு ஆய்விற்காக பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உடலை அனுப்பி வைத்தனர். மேலும் டிஎஸ்பி சண்முகம் மற்றும் சென்னிமலை ஆய்வாளர் சிவக்குமார், அரச்சலூர் ஆய்வாளர் ராஜ கண்ணன் ஆகியோர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தப்பி ஓடிய சந்தோஷை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

மேலும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமரா காட்சிகளையும் போலீசார் சேகரித்து தொடர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

சொத்துக்காக பெற்ற தாயை சொத்துக்காக மகனே அடித்துக் கொன்ற சம்பவம் வெள்ளோடு பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# பழவேற்காடு மீனவர்கள் வருகிற 2ம் தேதி கடலில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தல்!

திருவள்ளூர்: அக்.31–

பழவேற்காடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் வருகிற 2ம் தேதி கடலில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2வது ஏவுதளத்தில் இருந்து ‘எல்.வி.எம்3’ என்ற ராக்கெட் மூலம் ஜிசாட்7 என்று அழைக்கப்படும் சி.எம்.எஸ் 03 செயற்கைக்கோளை வருகிற 2ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.26 மணிக்கு விண்ணில் ஏவுகிறது. இதற்கான இறுதிகட்டப்பணியான ‘கவுண்ட்டவுன்’ 1ம் தேதி மாலை 5.26 மணி அளவில் தொடங்க இருக்கிறது.

இந்த ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதையொட்டி ஸ்ரீஹரிகோட்டா அருகில் உள்ள பழவேற்காடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் வருகிற 2ம் தேதி கடலில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதை பார்வையிடுவதற்காக ஸ்ரீஹரிகோட்டாவில் 10,000 பேர் அமர்ந்து பார்வையிடும் வகையில் பார்வையாளர்கள் மாடம் கட்டப்பட்டுள்ளது. இதில் அமர்ந்து எல்.வி.எம்.3 ராக்கெட் ஏவப்படுவதை பார்வையிட விரும்பும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் https://lvg.shar.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியுள்ளார்.

# திற்பரப்பு அருவியில் 7வது நாளாக சுற்றுலாப் பயணிகளுக்கு தடை; தாமிரபரணி,கோதையாறு கரையோர மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை

கன்னியாகுமரி: அக்.31–

திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் சுற்றுலாப்பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. இதன் காரணமாக மாவட்டத்தில் உள்ள முக்கிய அணைகளான பேச்சிபாறை அணை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளில் வேகமாக நீர்மட்டம் உயர்ந்தது.

பேச்சுப்பாறை அணை முழுகொள்ளளவை எட்டியதை தொடர்ந்து, முதற் கட்டமாக 500 கன அடி நீரும், தொடர்ந்து, 2,500 கனஅடி தண்ணீரும் உபரி நீராக திறந்துவிடபட்டது. இதன் காரணமாக கோதையாற்றில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஏற்பட்டது. நீச்சல் குளம், கல்மண்டபங்களை மூழ்கடித்து தண்ணீர் சென்றது. இதன் காரணமாக கடந்த 7 நாட்களாக திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாவட்டம் முழுவதும் சற்று மழை குறைந்தாலும் வெள்ளம் குறையவில்லை. மேலும் மழை நீடிக்க வாய்ப்புள்ளதால் தொடர்ந்து சுற்றுலா பயணிகள் நீடிக்கவாய்ப்புள்ளது. தாமிரபரணி, கோதையாறு கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421